DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC .No.112/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | P.W. 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | தெண்டபாணி | ஜாதி | : | |
| கிராமம் | : | வெள்ள கோவில் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.08.2024.

**குறுக்கு விசாரணை**

1. எதிரி கோமதியை எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் கோவையிலுள்ள எனது வீட்டிற்கு பக்கத்து தெருவில் எதிரி வசித்து வந்த வகையில் எனக்கு தெரியும். நான் கோவை விஷ்வாசபுரம், செந்தில் நகரில் வசித்து வருகிறேன். எதிரி விஷ்வாசபுரம், அன்னை நகரில் வசித்து வருகிறார். நான் கோவையில் வசித்தபோது எதிரி எனக்கு பழக்கம் என்று சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனைவி, குழந்தைகள் கோவையில் வசித்து வருகிறார்கள் என்பதை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. நான் சொல்வது பொய் என்றும், இந்த வழக்கிற்காக வேண்டி தான் நான் கோவையில் வசித்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் தான் அது சம்மந்தப்பட்ட ஆவணம் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி நிக்கா இன்ஜீனியரிங் கம்பனி நடத்தி வருவதன் மூலம் எனக்கு அறிமுகம். நான் 2021, நவம்பர் வரை நான் தகவல் தொழில்நுட்ப துறையில் கோவை சிடிஎஸ் நிறுவனத்தில் சாப்ட்வேர் இன்ஜீனியராக பணிபுரிந்து வந்தேன்.

3. எதிரி என்னிடம் அவரது வியாபார நிமித்தமாக கடன் வாங்கினார். நான் சொல்வது போல எதிரி கம்பனி நடத்தி வருகிறார் என்பது சம்மந்தமான பதிவு சான்று வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் அவரது நிறுவனத்தின் பதிவு சான்று சம்மந்தமான ஆவணம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமான வரவு செலவு தவிர வேறு வரவு செலவு எதிரியிடம் வைத்துள்ளேனா என்றால் ரூ.2000/–, ரூ.3000/– வீதம் அடிக்கடி கைமாற்று கடனாக வாங்கியுள்ளார். மேற்படி வீதம் எந்தெந்த தேதியில் அந்த தொகையை கொடுத்து திருப்பி பெற்றேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் கொடுத்த கைமாற்று கடனுக்கு வட்டி எதுவும் வாங்கவில்லை.

4. இந்த வழக்கு சம்மந்தமான கடன் தொகையை எதிரி என்னிடம் 05.01.2021ம் தேதியில் கேட்டார். நான் 10.01.2021ம் தேதியன்று எதிரிக்கு கடன் கொடுத்தேன். 05.01.2021ம் தேதியில் என் கை வசம் பணம் இல்லாததால் 10.01.2021ம் தேதியில் எனக்கு பணம் கிடைத்தவுடன் எதிரிக்கு கடன் கொடுத்தேன். எனது தோப்பில் தேங்காய் விற்ற வகையில் கிடைத்த ரூ.5,00,000/–ல் ரூ.3,50,000/–ஐ எதிரிக்கு கடனாக கொடுத்தேன். எனக்கு தென்னந்தோப்பு இருப்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

5. நான் சொல்வது போல எனக்கு தென்னந்தோப்போ, கடன் கொடுக்கும் அளவிற்கு வசதியோ இல்லாததால் தான் நான் அது சம்மந்தப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் எனது வங்கி கணக்கில் எவ்வளவு இருப்பு தொகை இருந்தது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது வங்கி கணக்கின் வரவு செலவு பட்டியல் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு கடன் கொடுத்த காலத்திலிருந்து வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில் வருமான வரி செலுத்தியுள்ளேன். அதற்கு பிறகு நான் வருமான வரி செலுத்தவில்லை. மேற்படி எனது வருமான வரி கணக்கில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகை காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பி.இ வரை படித்துள்ளேன். நான் எதிரியை தவிர வேறு நபர்களுக்கு கடன் கொடுத்தது கிடையாது. மேற்படி வீதம் எதிரி என்னிடமிருந்து கைமாற்று கடனாக வாங்கிய தொகையை அவ்வபோது ரொக்கமாகவும், எனது வங்கி கணக்கு மூலமாகவும் செலுத்தியுள்ளார்.

6. இந்த வழக்கு கடன் தொகையை எனது சொந்த ஊரான வேலப்பன்நாயக்கன் வலசுவில் உள்ள எனது வீட்டில் வைத்து எதிரிக்கு கொடுத்தேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்தபோது எதிரியுடன் வந்த பிரபு மற்றும் என்னுடன் இருந்த பாப்பான் பாளையத்தை சார்ந்த சதீஷ்குமார் என்பவர்களும் உடனிருந்தார்கள். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது மேற்கண்ட நபர்கள் இருந்தார்கள் என்று எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த இரண்டு நபர்களையும் எனது தரப்பில் சாட்சிகளாக விசாரிக்க போகிறேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்பேன்.

7. அதேபோல் நான் சொல்லும் கடனுறுதி சீட்டு யாரால் எழுதப்பட்டது என்றால் சதீஷ்குமார் எழுதினார். மற்றொரு சாட்சியான பிரபு யார், எந்த ஊரை சார்ந்தவர் என்ற விவரம் எனக்கு தெரியாது. இரண்டு சாட்சிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் விதமாக அவர்களின் ஆதார் அட்டை எதுவும் வாங்கவில்லை. எதிரி எழுதிக் கொடுத்தாக சொல்லப்படும் கடனுறுதி சீட்டின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடன் தொகைக்கு ரூ.100/-க்கு ரூ.1/- என வட்டி வீதம் எதிரி நிர்ணயம் செய்தார். எதிரி வட்டி தொகையை சரியான தேதியில் கொடுக்கமாட்டார், 2, 3 நாட்கள் தாமதமாக கொடுப்பார். அதற்கான ரசீது எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரி எனக்கு 11 மாத காலம் எனக்கு வட்டி செலுத்தி வந்தார். மாத வட்டியாக ரூ.3500/- செலுத்தி வந்தார். அந்த வட்டி தொகையான ரூ.3500/-ஐ எதிரி எனக்கு ரொக்கமாக செலுத்தி வந்தார். மேற்படி காலத்தில் எனக்கும், எதிரிக்கும் வங்கி கணக்கு இருந்து வந்தது என்றால் சரிதான். அதனால் நான் இவ்வழக்கு கடன் தொகையான எதிரியின் வங்கி கணக்கு மூலமாக கொடுக்காத காரணம் ஏதேனும் உண்டா என்றால் கையில் ரொக்கமாக என்னிடம் இருந்ததால் நான் எதிரிக்கு ரொக்க கடனாக கொடுத்தேன். ரூ.2,00,000/-க்கு மேலான தொகையை வங்கி கணக்கு மூலமாக தான் செலுத்த வேண்டும் என்பது வருமான வரி துறையின் சட்டவிதியில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

8. நான் எதிரிக்கு கடன் எதுவும் கொடுக்காததால் தான் மேற்படி சட்ட விதி எதுவும் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் நிறுவனத்தில் இரும்பு சம்மந்தமான உதிரி பாகங்கள் தயாரிக்கப்படுகிறது. அந்த பொருட்கள் எதற்கான பயன்பாடு என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு காசோலை எதிரியின் நிறுவனத்திற்குரிய காசோலை என்றால் சரிதான். அந்த எதிரியின் நிறுவனம் கூட்டாண்மை நிறுவனமா அல்லது எதிரிக்கு பாத்தியப்பட்ட நிறுவனமா என்றால் எதிரிக்கு மட்டும் பாத்தியப்பட்ட நிறுவனம்.

9. எதிரியின் நிறுவனம் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். நான் எதிரியின் தனிபட்ட வங்கி கணக்கு காசோலை வேண்டும் என்று நான் கேட்கவில்லை. எதிரி 10.12.2021ம் தேதியில் இவ்வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார். எதிரி என்னிடம் கடன் பெற்ற தேதியிலேயே எனக்கு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த கடனுறுதி சீட்டு இவ்வழக்கு காசோலையை எதிரி எனக்கு கொடுக்கப்பட்ட தேதியில் செல்லும் தன்மையுடன் தான் இருந்தது என்றால் சரிதான். அந்த செல்லும் தன்மை கொண்ட கடனுறுதி சீட்டை எதிரி திருப்பி பெற்றுக் கொண்டு விட்டு என்னிடம் கடன் தொகை எதுவும் திருப்பி தராமல் இவ்வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்ததற்கு என்ன காரணம் என்றால் காசோலையை வங்கி கணக்கில் போட்டால் பணம் கிடைத்துவிடும் என்று எதிரி சொன்னதன் பேரில் காசோலையை பெற்றுக் கொண்டேன். காசோலையை எதிரி 10.12.2021ம் தேதியன்று 13.12.2021ம் தேதியிட்டு எழுதிக் கொடுத்தார். 3 நாட்கள் பின்தேதியிட்ட எழுதிக் கொடுத்தற்கு என்ன காரணம் என்றால் அது எதிரிக்கு தான் தெரியும். எனக்கு எதிரி காசோலை கொடுத்த தேதியில் நான் எதிரிக்கு எந்தவித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டிற்கு பதிலாக ஆதரவுக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. எதிரியிடம் செல்போன் உள்ளது. அந்த செல்போன் மூலம் அவரது வங்கி கணக்கு இருப்பு விபத்தை தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். எதிரியின் வங்கி கணக்கு இருப்பு விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை.

10. நான் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் 10.01.2021ம் தேதி உலகம் முழுவதும் கொரானா நோய் தொற்றால் பல நிறுவனங்கள் தொழில் முடங்கி போயிருந்தது என்றால் சரிதான். அதனால் நிறுவனங்கள் தொழில் செய்யக்கூடாது என்று நிபந்தனையுடன் கூடிய தடை உத்தரவு இருந்து வந்தது என்றால் அது எனக்கு தெரியாது. அதனால் எதிரிக்கு நான் இவ்வழக்கு கடன் தொகையை கடனாக கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியின் கணவருடன் எனக்கு கடன் வரவு செலவு உண்டு என்றால் சரிதான். எதிரியின் கணவருக்கும், எனக்கும் ஏற்பட்ட கடன் வரவு செலவு சம்மந்தமாக ஏற்பட்ட மனஸ்தாபத்தில் எதிரியின் காசோலையை மோசடியாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரி இவ்வழக்கு கடன் தொகையை என்னிடம் கடனாக வாங்கியது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கணவர் ஏற்கனவே செக்யூரிட்டிக்காக என்னிடம் கொடுத்திருந்த எதிரியின் காசோலையை மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கு காசோலையை எதிரி எங்கள் ஊரில் வைத்து கொடுத்தார். எதிரி மேற்படி வீதம் காசோலையை கொடுக்க வருகின்ற விவரத்தை ஏற்கனவே என்னிடம் தெரிவித்தாரா என்றால் வாங்கிய கடனை திருப்பி தருவதற்காக வருவதாக சொன்னார், ஆனால் கடனுறுதி சீட்டை திரும்ப பெற்றுக் கொண்டு இவ்வழக்கு காசோலையை கொடுத்துவிட்டு சென்றார். இந்த வழக்கு காசோலையை எதிரி ஏற்கனவே பூர்த்தி செய்து கொண்டு வந்து என் முன்னிலையில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார். அதனால் காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

12. என்னிடம் காட்டடப்படும் வங்கி சலான் மற்றும் காசோலையில் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டுள்ளது. அந்த வங்கி சலானை நான் பூர்த்தி செய்தேனா என்றால் இல்லை. வங்கியிலிருந்த வங்கி ஊழியர் ஒருவரால் பூர்த்தி செய்யப்பட்டது. அந்த வங்கி சலானை நான் பூர்த்தி செய்யாததற்கு சட்டப்படியான காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பொய்யான வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Typed/before me in open Court read over/interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2024.08.14 18:32:03 +0530

Judicial Magistrate
Kangayam.